முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1126

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

29.10.2022, சனிக்கிழமை

1. ஞானபண்டிதன் என் சக்தியாக
ஞானம் வழங்க கலியுகத்தில்
ஞானதேசிகனாய் வந்த குருவே
ஞானிகளின் துணைகொண்ட ஞானகுருவே
2. குரு அரங்கனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
கூறிடுவேன் ஞான அறிவுரை ஆசி
(சுபகிருது வருடம் ஐப்பசி மாதம் 12 ம் நாள் 29.10.2022 சனிக்கிழமை)
தான தரும சக்தி பெருக்கி கலியில்
தனித்துவமான ஆன்மீக வழிகள் அமைத்து
3. அமைத்துமே அற்புதம் நடத்தி
அகிலத்தார்க்கு எளிமைபட ஞானத்தை
ஏற்றுகொள்ளும் வண்ணம் அருளுகின்ற ஞானியே
ஏழாம்படை வீடு படைத்த தவசியே
4. தவசியே ஆறுமுக அரங்கனே
தானுனக்கு சுப்ரமணியர் யானும் சர்வ சூட்சுமமாய்
சூட்சுமமாய் கலந்து அற்புதத்தை சுருதிபடி உலகமெங்கும் நடத்தி வர
மாட்சிமைபட உன் வழிகளை மகத்துவமாக கருதி சரணாகதி
5. சரணாகதி கொண்ட மக்களெல்லாம்
சடுதி ஞானத்தில் தேறி
சரவணச் சுடரேற்றி ஞானிகள் பூஜை
சதா உன் வழி தொடர்ந்து செய்ய
6. செய்யவே உலகினில் ஞானவான்கள் படை
செப்பிடுவேன் ஆறுமுகன் என்னால் அமைக்கப்பட்டு
அமைக்கப்பட்டு உலக மாற்றமாக அரங்கன் நீ விரும்புகின்ற ஞான ஆட்சி
அமைந்திடும் சடுதி இந்த கலியினில் அற்புதத்தை அரங்கன் உன் அவதாரத்தில் நடத்திக்காட்டி
7. காட்டியே ஆறுமுகன் யானும் கருணைபட உன் நோக்கம் பூர்த்திசெய்வேன்
வாட்டமற உலகோரையும் தேற்றி வையகத்தை ஞானிகள் நிரம்பிய பூமியாக மாற்றி
ஞான யுகதேற்றம் தருவேன்
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–